**செய்தி வெளியீடு எண்: 146** **நாள்: 27.02.2018**

# தேசிய வேளாண்மை மற்றும்
# ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு)
# மாநிலக் கடன் கருத்தரங்கு

-----

**“கடவுள் என்னும் முதலாளி**

**கண்டெடுத்த தொழிலாளி”**

**என்று**

**புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்களால்**

**போற்றிப் புகழப்பட்ட விவசாய பெருங்குடி மக்களின்**

**நலம் காக்கவும்,**

**விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வில்**

**வளம் சேர்க்கவும்,**

**எண்ணில்லாத் திட்டங்கள் தந்து,**

**தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு சென்ற இதயதெய்வம் புரட்சித்தலைவி**

**மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி,**

தமிழகத்தின் வேளாண் வளர்ச்சியிலும்,
ஊரக மேம்பாட்டிலும்,
பெரும் பங்காற்றி வரும் நபார்டு என்னும்
தேசிய வேளாண்மை மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கியின் சார்பில்,
சிறப்புடன் ஏற்பாடு செய்து நடத்தப்படும்
மாநில கடன் கருத்தரங்கிற்கு
வருகை புரிந்துள்ள

இக்கருத்தரங்கில் பங்கேற்றுள்ள

வரவேற்புரை நிகழ்த்தியுள்ள

நபார்டு வங்கியின் தலைமைப் பொது மேலாளர்,

**திரு. எஸ். நாகூர் அலி ஜின்னா அவர்களே,**

இக்கருத்தரங்கிற்கு வருகை புரிந்துள்ள,

ரிசர்வ் வங்கியின் தலைமை பொது மேலாளர்

**டாக்டர் கே. பாலு அவர்களே,**

ஊரக வளர்ச்சித் துறையின் அரசு முதன்மைச் செயலர்,

**திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா அவர்களே,**

வேளாண்மைத் துறை முதன்மைச் செயலர்,

**திரு. ககன்தீப் சிங் பேடி அவர்களே,**

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின்

**துணை வேந்தர் திரு. கே. ராமசாமி அவர்களே,**

இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேலாண்மை இயக்குநர்,

**திரு. ஆர். சுப்ரமணிய குமார் அவர்களே,**

இந்தியன் வங்கி மேலாண்மை இயக்குநர்

**திரு. கிஷோர் கரத் அவர்களே,**

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவின்

தலைமை பொது மேலாளர்,

**திரு. ரமேஷ் பாபு அவர்களே,**

கூட்டுறவு மற்றும் உணவுத் துறை அரசு முதன்மை செயலாளர் **திரு. குமார் ஜெயந்த் அவர்களே,**

மாநில வங்கி கூட்டுறவுத் தலைவர்

**திரு. இளங்கோவன் அவர்களே,**

பல்வேறு மாவட்ட கூட்டுறவு வங்கத் தலைவர்களே,

இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ள அரசு உயர் அலுவலர்களே,

பல்வேறு வங்கிகளைச் சார்ந்த உயர் அலுவலர்களே,

சமுதாய வளர்ச்சிக்காக அரும்பணியாற்றி

சாதனை புரிந்து,
இக்கருத்தரங்கில்
விருதுகளைப் பெருகின்ற விருதாளர்களே,

பெரியோர்களே, தாய்மார்களே,
சகோதர சகோதரிகளே,
பத்திரிகை மற்றும் ஊடகத் துறை நண்பர்களே,
உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண் வளர்ச்சிக்காகவும், ஊரக மேம்பாட்டுக்காகவும் கடந்த 35 ஆண்டுகளாக பெரும் பங்காற்றி வரும் நபார்டு வங்கியின் சார்பில் இன்று நடத்தப்படுகின்ற, 2018-19 ஆம் ஆண்டுக்கான, வேளாண் கடன் சம்பந்தமான மாநில கருத்தரங்கினை துவக்கி வைப்பதில், நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

விவசாயப் பெருமக்களின் வளர்ச்சிக்கும்
வேளாண்மையின் வளர்ச்சிக்கும்
தமிழக அரசு செயல்படுத்திடும்
பல திட்டங்களுக்கு நபார்டு வங்கி
தேவையான கடன் உதவி வழங்கி
அரசுடன் இணைந்து செயலாற்றி வருகிறது.

அரசு என்றாலும், தனி நபர் என்றாலும்
இன்றைய கால கட்டத்தில் கடன் என்பது
தவிர்க்க முடியாத ஒன்றாக மாறிவிட்டது.

ஒரு பொருளை ஒட்டு மொத்தமாக பணம் கொடுத்து வாங்க முடியாத நிலையில்,
கடன்தான் அவர்களுக்கு கை கொடுக்கிறது.

கடனால் கண் கலங்கிய காலம் மாறி
அந்த கடனே ஒருவரை கைதூக்கி
முன்னேற்றுகின்ற காலம் உருவாகி இருக்கிறது.
வீட்டுமனை வாங்க கடன்,
அந்த மனையில் வீடு கட்ட கடன்,

நகை வாங்க கடன்,
அந்த நகையை அடமானம் வைத்து கடன்,
அடமானம் வைத்த நகையை மீட்டெடுக்க கடன்,

தொழில் தொடங்க கடன்,
கல்விச் செலவுக்கு கடன்,
வாகனம் வாங்க கடன்,

தனி நபர் முன்னேற்றத்திற்காக
பலவகையிலும் கடன் என்று
இன்றைய மனித வாழ்வில்
கடன் வாங்குவதற்கான அவசியம்
பெருகிக் கொண்டே போகிறது.

முன்பெல்லாம்,
வங்கிகளில் கடன் வாங்க வேண்டும் என்றால்,
ஏழு கடல், ஏழு மலை தாண்டி
தலையால் தண்ணீர் குடித்து
கடன் பெறுகின்ற நிலை இருந்தது.
ஆனால், இன்றோ
அரசும், தனியார் வங்கிகளும்,
பொதுத்துறை வங்கிகளும்,

நம்மைத் தேடி வந்து கடன் கொடுக்க தயாராக இருக்கின்றன.

இவையெல்லாம்
தனி நபர் நலனுக்கான கடன்கள் என்றால்,
பொது நலனுக்கான கடனும் ஒன்று உண்டு,
அது, உலகின் பசிபோக்கி
உயிர்களை காத்து நிற்கும் அறத்தொழில் புரியும்
விவசாயிகளுக்கு வழங்குகின்ற வேளாண் கடனே ஆகும்.

**“ஏரும் இரண்டுளதாய்,**
**இல்லத்தே வித்துளதாய்,**
**நீர் அருகே சேர்ந்த நிலமுமாய்,**
**ஊருக்குள் சென்று வர அணித்தாய்,**
**செல்வாரும் சொல் கேட்டால்,**
**என்றும் உழவே இனிது.”**

– என்று பாடினார் அவ்வை பெருமாட்டி.

அதாவது,
நிலத்தை உழுது பண்படுத்திட
இரண்டு ஏர்கள் இருக்க வேண்டும்.

வீட்டிலேயே விதையும் இருக்க வேண்டும்
நீர்வளத்தை அருகிலேயே கொண்ட
நிலமாக இருக்க வேண்டும்

அந்த நிலமும் உடனுக்குடன் சென்று வர
ஊருக்குப் பக்கத்திலேயே இருக்க வேண்டும்
அங்கே பணி செய்யும் தொழிலாளர்களும்

நாம் சொல்கின்ற சொல்லை
அப்படியே கேட்டு நடப்பவராக இருக்க வேண்டும்.

இது எல்லாம் அமைந்தால்,
உழவுத் தொழிலே இனியத் தொழிலாகும்
என்று பாடிய அவ்வையார்,
இதற்கெல்லாம் அடிப்படையான பொருள் இருக்க வேண்டும் என்று சொல்லாமல் விட்டுவிட்டார்.
அந்த பொருளை கடனாக தருகின்ற பணியைத் தான்
நபார்டு வங்கி செய்து கொண்டிருக்கிறது.

கடந்த 35 ஆண்டுகளாக, தமிழ்நாட்டின் விவசாயப் பெருமக்களின் வளர்ச்சிக்கும், வேளாண் வளர்ச்சிக்கும் தமிழக அரசு செயல்படுத்திய பல திட்டங்களுக்கு நபார்டு வங்கி கடனுதவி வழங்கி, அரசுடன் இணைந்து சேவை ஆற்றி வருகிறது.

குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால், தமிழகத்தில் உள்ள விவசாயிகளை ஒருங்கிணைத்து உழவர் உற்பத்தி கூட்டமைப்புகளை உருவாக்கி, விவசாயிகளின் கூட்டுசக்தியைப் பெருக்கி, அவர்களின் வருவாயைப் பெருக்கும் வகையில், தமிழ்நாடு அரசிற்கு நிதியுதவி அளித்து விவசாயத்தில் ஒரு மறுமலர்ச்சியை நபார்டு வங்கி ஏற்படுத்தி வருகிறது.

நபார்டு வங்கி தொடங்கப்பட்டது முதல் இன்று வரை, தமிழகத்தில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக, நபார்டு வங்கியால் 85 **ஆயிரத்து** 290 **கோடி ரூபாய்** நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும், இதில் தமிழக அரசுக்கு நேரடியாக 19 ஆயிரத்து 300 கோடி ரூபாயும் தமிழ்நாட்டின் வங்கிகளுக்கு வழங்கிய 65 ஆயிரம் கோடி ரூபாயும் அடங்கும் என்றும் புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

மொத்தமாக கணக்கிட்டால், ஆண்டுதோறும் தமிழ்நாட்டின் பல்வேறு வளர்ச்சிப் பணிகளுக்கு, 13 ஆயிரம் கோடி ரூபாய் அளவுக்கு நபார்டு வங்கி நிதி உதவி அளித்து

வருகிறது. இதனை தமிழகத்தின் தேவையை கருத்தில் கொண்டு வரும் காலங்களில் கணிசமாக அதிகரிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண் கடன் உதவியை பொறுத்தமட்டில் 2018-2019 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டுக்கு 2 **லட்சத்து** 6 **ஆயிரத்து** 684 **கோடி ரூபாய்** அளவிற்கு கடனுதவி வழங்குவதற்கு வாய்ப்பு இருப்பதாக நபார்டு வங்கி மதிப்பீடு செய்துள்ளதாக அறிகிறேன். இக்கருத்தரங்கிற்கு வருகை தந்திருக்கும் அனைத்து வங்கியாளர்களும், நபார்டு வங்கியின் இந்த மதிப்பீட்டினை உள்வாங்கி அதன் வழிகாட்டுதலைப் பயன்படுத்திக்கொண்டு, முன்னுரிமைக் கடன் (**Priority Sector**) பிரிவின்கீழ் கடனுதவி வழங்குவதில் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கிராமச்சாலைகள் முதல் பாடசாலைகள் வரை, கால்நடை மருத்துவமையங்கள் முதல் மீன்பிடி துறைமுகங்கள் வரை, விவசாயக் கூட்டுறவு சங்கங்கள் முதல் பொது விநியோக கிடங்குகள் வரை, அனைத்து விதமான கிராம முன்னேற்றத்துக்கான திட்டங்களிலும், நபார்டு வங்கி தனது பங்களிப்பை வழங்கி வருகிறது.

கிராம முன்னேற்றத்திற்கான திட்டங்களை செயல்படுத்துவதில், நபார்டு வங்கி தனது ஊரக உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியிலிருந்து, தமிழ்நாடு அரசுக்கு நிதியுதவி அளித்து வருகிறது.

இதன்மூலமாக,

- 6.14 லட்சம் ஹெக்டேர் அளவுக்கு, நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெற்றுள்ளன.
- சுமார் 57 ஆயிரம் கி.மீ. தூரத்துக்கு, சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- 86 ஆயிரத்து 973 மீட்டர் நீளத்துக்கு, பாலங்கள் கட்டப்பட்டுள்ளன.
- 13.02 லட்சம் டன் கொள்ளவுக்கு, சேமிப்புக் கிடங்குகள் கட்டப்பட்டுள்ளன.
- இவைதவிர, 36 லட்சம் மக்கள் பயன்பெறும் வகையில், பல்வேறு குடிநீர்த் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

இதுமட்டுமின்றி, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம், தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்

கழகங்களுக்கு கட்டமைப்பை மேம்படுத்த உதவி அளிப்பதன் மூலமாக வேளாண்மை மற்றும் வேளாண்மை சார்ந்த தொழில்நுட்பக் கல்வி வளர்ச்சிக்கும், வேளாண்மை சார்ந்த ஆராய்ச்சி மற்றும் தொழில் வளர்ச்சிக்கும் நபார்டு வங்கி உறுதுணை புரிந்துள்ளது.

நீர்ச்செறிவு மேம்பாட்டுத்திட்டம், பழங்குடியினர் மேம்பாட்டு நிறுவனங்கள் மற்றும் உழவர் உற்பத்தி நிறுவனங்கள், அனைவருக்கும் வங்கிச் சேவை உள்ளிட்ட பல வகையான வளர்ச்சித் திட்டங்களுக்கும் நபார்டு வங்கி நிதியுதவி அளித்துள்ளது.

நபார்டு வங்கி கடன் உதவி பெற்று, அதன் மூலமாக விவசாயிகள், இடுபொருள் விலை சலுகை முதல், மேம்பட்ட சந்தை வாய்ப்புகள் வரை, பல்வேறு வகையான பலன்களை பெற்றிட ஏதுவாக, இன்று தமிழ்நாட்டில், 169 உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள் பதிவுசெய்யப்பட்டு, வெற்றிகரமான முறையில் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே முதல் முறையாக, நெசவாளர்களை ஒருங்கிணைத்து இத்தகைய உற்பத்தியாளர் நிறுவனத்தையும் நபார்டு வங்கி சேலம் மாவட்டத்தில் உருவாக்கி உள்ளது.

விவசாயத்துக்கு கடனுதவி வழங்குவதில், கூட்டுறவு வங்கிகள் முக்கியப் பங்காற்றி வருகின்றன. கூட்டுறவு வங்கிகளும், நிதி ஆதாரம் மிகுந்த வர்த்தக வங்கிகளுக்கு இணையாக சேவை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன் நபார்டு வங்கி தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு வங்கிகளுக்கு பல்வேறு வகைகளிலும் உதவிக் கரம் நீட்டி வருகிறது

கிராம கூட்டுறவு வங்கிகளில் அதன் வாடிக்கையாளர்களுக்கு தொழில்நுட்பரீதியாக மேம்பட்ட சேவையை வழங்கிடும் வகையில் Core Banking Solutionஐ செயல்படுத்தவும், ரூ-பே கடன் அட்டை வழங்கவும், ஏ.டி.எம் இயந்திரங்களை நிர்மாணிக்கவும், நபார்டு வங்கி உதவியுள்ளது மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது.

தமிழ்நாட்டின் எட்டு இலட்சம் கூட்டுறவு வங்கி வாடிக்கையாளர்களுக்கு, ரூபே கடன் அட்டை வழங்கும் பணி நடந்து வருகிறது. தமிழ்நாட்டில் இயங்கிவரும் தொடக்க கூட்டுறவு சங்கங்களை கணினிமயமாக்குவதற்கு, மாநில அரசுக்கு நபார்டு வங்கி தொழில்நுட்ப உதவி வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தி வரும் சுயஉதவிக் குழுக்கள் குறித்த விபரங்களை, டிஜிட்டல் மயமாக்கும் இ-சக்தி திட்டம் வெற்றி பெற, தமிழக அரசு முழுமையான ஒத்துழைப்பினை அளிக்கும் என்பதை, இந்த தருணத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பருவநிலை மாற்றங்களாலும், தண்ணீர்த் தட்டுப்பாடு போன்ற பல்வேறு பிரச்சினைகள் இருந்தாலும், அவற்றை வெற்றி கொண்டு, 2018-2019 ஆம் ஆண்டில், 100 லட்சம் டன் உணவு தானிய உற்பத்தி என்ற உயர் இலக்கினை மாண்புமிகு அம்மா அவர்களது அரசு நிச்சயம் அடையும்.

இந்த லட்சியத்தை நிறைவேற்றும் வகையில், குடிமராமத்து, மானாவாரி நிலசாகுபடி, விவசாயப் பொருட்கள் விற்பனை மையங்களை நவீனப்படுத்துதல், அவற்றை தேசிய விவசாய சந்தைகளுடன் ஒருங்கிணைத்தல் போன்ற வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களை, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்களது வழியில், தமிழ்நாடு அரசு செயல்படுத்திவரும் வேளாண் மேம்பாட்டுத் திட்டங்களைப் பற்றி விரிவாக எடுத்துக் கூற வேண்டியது எனது கடமையாகும்.

தண்ணீரைக் குறைந்த அளவில் சிக்கனமாகவும், சிறப்பாகவும் பயன்படுத்திட வேண்டி, மாண்புமிகு அம்மா அவர்கள் நுண்பாசன முறையினை ஊக்குவிக்கும் திட்டத்தினை செயல்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் மட்டுமே நுண்பாசன முறையைப் பயன்படுத்தும் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், மற்ற விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்பட்டது. இதனை அம்மாவின் அரசு தொடர்ந்து சிறப்புடன் செயல்படுத்தி வருகிறது என்பதை பெருமையுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

வேளாண் பொருட்களுக்கு நல்ல விலை கிடைப்பதற்கு, சந்தையில் நிலவும் விலை விபரங்கள் உடனுக்குடன் விவசாயிகளுக்குத் தெரிய வேண்டியது முக்கியமாகும். அதேபோல சந்தைப் பரிவர்த்தனைகள் வெளிப்படையாக மேற்கொள்ளப்பட வேண்டியதும், விற்பனைக்கான தொகை உடனுக்குடன் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டியதும் மிகவும் அவசியமாகும்.

இதற்காக மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, வேளாண் பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவியாக, இணையம் மூலமான ஒரு விற்பனைத் தளத்தை, நபார்டு வங்கி நிதியுதவி மூலம் அமைத்து வருகிறது.

இந்த தொழில்நுட்ப ரீதியிலான உதவி 15 ஒழுங்கு படுத்தப்பட்ட விற்பனை மையங்கள், எட்டு விவசாய கூட்டுறவு விற்பனை மையங்கள் ஆகியவற்றில் 99 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட உள்ளது.

இதன்விளைவாக, தமிழ்நாட்டில் உள்ள 277 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களும், இ-நாம் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்படும். இத்திட்டம் வேளாண்துறையில் ஒரு பெருத்த மாற்றத்தைக் கொண்டுவரக்கூடிய முக்கியத் திட்டமாகும். இத்திட்டத்தின் முழுப்பயனும் விவசாயிகளைச் சென்றடைய அனைத்து வங்கிகளும் முழுமையான ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று நான் இந்தத் தருணத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

உணவு உற்பத்தியில் பல சாதனைகளுக்கும் முன்னோடி நிலையில் உள்ள தமிழ்நாடு, உணவுப் பொருட்களை பதப்படுத்தும் துறையில் கணிசமான அளவு முன்னேறி வருகிறது. வேளாண் பொருட்களைப் பதப்படுத்தி, விநியோகத் தொடரமைப்பை மேம்படுத்துவதன் வாயிலாக, விவசாயிகளின் வருவாயில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

காய்கறி, பழவகைகளின் உற்பத்திக்குப் பிந்தைய நஷ்டத்தை தவிர்க்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்களது அரசு, சுமார் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில், விவசாயிகளையும், விற்பனை சந்தைகளையும் இணைக்கும் திட்டத்தை, நபார்டு வங்கியின் உதவியுடன் செயல்படுத்த இருக்கிறது. இதன்மூலமாக, வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பழவகைகள் தங்குதடையின்றி கிடைப்பதோடு, உபரி உற்பத்தியை மதிப்பு கூட்டிய பொருட்களாக மாற்றி விற்பனை செய்யமுடியும். இதனால் விவசாயிகள் வருவாயும் கணிசமாக பெருகும்.

மத்திய அரசின், உணவு பதப்படுத்தும் தொழில்அமைச்சகத்துடன் இணைந்து, நபார்டு உதவியோடு விரைவில் திண்டிவனத்தில் ஓர் உணவுப்பூங்கா அமைக்க, நடவடிக்கை

எடுக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து, மேலும் பத்து மாவட்டங்களில் உணவுப் பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன.

இந்த உணவுப்பூங்காக்களில் தனியார் முதலீடுகள் அத்தியாவசியமானவை என்பதால், ஆர்வமுள்ள தொழில்முனைவோர்களுக்கு ஆலோசனையும், கடனுதவியும் அளித்து, உதவ வேண்டும் என்று இங்கே கூடியுள்ள அனைத்து வங்கிகளையும் நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கருத்தரங்கத்தில், வங்கிகள், தொண்டு நிறுவனங்கள், உழவர் உற்பத்தியாளர் அமைப்புகள், இயற்கை விவசாயம் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளிலும், சாதனை புரிந்தவர்களுக்கு நபார்டு வங்கி விருதுகள் அளித்து கௌரவித்துள்ளது. விருது பெற்ற அனைத்து விருதாளர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பல ஆண்டுகளாக வேளாண் துறைக்காகவும், ஊரக மேம்பாட்டிற்காகவும், தமிழ்நாடு அரசுக்கு நபார்டு வங்கி நிதியுதவி அளிப்பதுடன் தொழில் நுட்ப உதவிகளும் அளித்து வருகிறது. இந்த உதவிகளை இனி வரும் காலங்களிலும் தொடர்ந்து வழங்கிட வேண்டும் என்றும், தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல அரசுடன் இணைந்து பணிபுரிய வேண்டும் என்றும், நபார்டு வங்கியை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தின் மேம்பாட்டிற்காக நபார்டு வங்கி எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களது அரசு உறுதுணையாக இருக்கும் என்று கூறி, இந்த நல்வாய்ப்பினை அளித்த நபார்டு வங்கியின் தலைமை பொது மேலாளர் மற்றும் அனைத்து நிர்வாகிகளுக்கும் எனது நன்றியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்து அமைகிறேன்.

**நன்றி, வணக்கம்!**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9**